

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அண்ணல் காந்தியடிகள் மதவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட நாளான நேற்று கலைஞர் டோல்கேட்டில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் ”மத நல்லிணக்க உறுதிமொழி நிகழ்வு நடைபெற்றது. மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில் இந்து மத சைவ, வைணவ குருக்கள், அர்ச்சகர்கள் கிராம கோவில் பூசாரிகள், கிறிஸ்தவ பாதிரியார்கள், இஸ்லாமிய இமாம்கள் உள்ளிட்டவர்கள் மத நல்லிணக்க உறுதிமொழி ஏற்றனர். இந்த நிகழ்வில், சேகரன் வண்ணை அரங்கநாதன், செந்தில், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர் மணிவேல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாநகர அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர்.



புதுதில்லி ராணுவ கன்டோன்மெண்டில் அமைந்துள்ள ராஷ்ட்ரிய ரங்க் சாலா முகாமில் நேற்று (30.01.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் அஜய் பட் குடியரசு தின விழாவை முன்னிட்டு புதுடில்லியில் 26.01.2024 அன்று நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கு கொண்ட தமிழ்நாடு மாநிலத்தின் அலங்கார வாகனத்திற்கு மூன்றாம் இடத்திற்கான விருதினை தமிழ்நாடு அரசின் முதன்மை உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் சாட்டர்ஜி அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது பாதுகாப்பு அமைச்சக இணைச்செயலாளர் அமிதாப்பிரசாத், பாதுகாப்புஅமைச்சக இயக்குநர் எம்.பி.குப்தா I.T.S., பாதுகாப்பு அமைச்சக சார்பு செயலாளர் அசோக் பாண்டே ஆகியோர் உடனிருந்தனர்.

### இந்து சமய அறநிலையத்துறையின்

# சட்டமன்ற அறிவிப்புகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்திட வேண்டும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அலுவலர்களுக்கு அறிவுரை!

சென்னை, ஜன. 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (30.01.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 30வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், 2021 - 2022 முதல் 2023 - 2024 வரையிலான நிதியாண்டுகளில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், குறிப்பாக ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் (Master Plan) கீழ் 15 திருக்கோயில்களில் நடைபெற்று வரும் திருப்பணிகள், 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில் திருப்பணிகள், கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகள், ரூ.1 கோடி மதிப்பீட்டிற்கு மேல் நடைபெற்று வரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்தும், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகள் மற்றும் நில அளவை பணிகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, திருக்கோயில்களில் அமைந்துள்ள பசுமடங்களை மேம்படுத்துதல், மலைத் திருக்கோயில்களுக்கு கம்பிவட ஊர்தி மற்றும் மின்தூக்கி அமைத்தல், புதிய திருத்தேர்கள் உருவாக்கும் பணிகள் மற்றும் மராமத்து பணிகள், உலோகத் திருமேனி பாதுகாப்பு அறை கட்டுமானம் போன்ற பணிகளின் முன்னேற்றம் குறித்தும், திருக்கோயில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நலன் சார்ந்த திட்டங்கள், திருக்கோயில்களில் வழங்கப்படும் அன்னதானம் மற்றும் பிரசாதத்தின் தரத்தினை உறுதி செய்திட அமைக்கப்பட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்களின் பணி முன்னேற்றம், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆகியவை குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறையில் ரூ.4,157.70 கோடி மதிப்பீட்டில் 18,788 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல பணிகள் நிறைவுற்றும், சில பணிகள் நடைபெற்றும் வருகின்றன. இதில் உபயதாரர்கள் மூலம் ரூ.1,253 கோடி மதிப்பீட்டில் 7,655 பணிகள் நடைபெற்று வருகிறது. சட்டமன்ற அறிவிப்புகளின்படி முடிவுற்ற பணிகளைத் தவிர்த்து இதர அனைத்துப் பணிகளையும் குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்திட மண்டல இணை ஆணையர்களும், பொறியாளர்களும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க. வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்பிரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில்

# மாநகர போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டுகள் விற்பனை!

## மாநகர போக்குவரத்துக் கழக இயக்குநர் தகவல்!

சென்னை, ஜன.31

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், பொதுமக்கள் நலன்கருதி, 01.02.2024 முதல் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர சலுகை பயணச்சீட்டு விற்பனை மையம் (MST Counter) செயல்பட உள்ளது - மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கிஸ் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களால், கடந்த 30.12.2023 அன்று புதிதாக திறக்கப்பட்ட கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், பொதுமக்கள் நலன் கருதி, 01.02.2024 முதல் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர சலுகை பயணச்சீட்டு விற்பனை மையம் (MST Counter) செயல்பட உள்ளது.

இப்பயணச்சீட்டு விற்பனை மையத்தில், விருப்பம்போல் பயணம் செய்யக் கூடிய ரூ.1000/- மதிப்பிலான பயண அட்டை TAYPT (ஒவ்வொரு மாதமும் 16-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 15-ஆம் தேதி வரை), மாதாந்திர சலுகை பயண அட்டை MST (மாதந்தோறும் 1-ஆம் தேதி முதல் 22-ஆம் தேதி வரை) மற்றும் 50% மாணவர் சலுகை பயண அட்டை SCT (ஒவ்வொரு மாதமும் 11-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 10-ஆம் தேதி வரை) பயணம் செய்யக்கூடிய பயணச்சீட்டுகள் மாதந்தோறும் 1 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை வழங்கப்படும்,

மேலும், 60 வயது பூர்த்தியடைந்த மூத்தக் குடிமக்களுக்கான கட்டணமில்லா பயண அட்டையுடன் 10 எண்ணிக்கை கொண்ட டோக்கன்கள், மா.போ.கழக கிளாம்பாக்கம் பணிமனையிலும் வழங்கப்படும்.

எனவே, பயணிகள் இதனை பயன்படுத்தி, கிளாம்பாக்கம் மாநகர் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டு விற்பனை மையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்துரை! சென்னை தெற்கு மாவட்ட

# மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.ராஜா இல்லத் திருமணம்!

## ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா தலைமை! எஸ்.அரவிந்த் ரமேஷ் - காரம்பாக்கம் க.கணபதி பங்கேற்பு!

சென்னை, ஜன.31-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மீனவர் அணி துணை அமைப்பாளர் டி.ராஜாவின் புதல்வி ரா.நிஷிதா-மா.சு.இனியன் ஆகியோரின் திருமணம் 2.2.2024 - வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் பரணிபுத்தூர் - சக்திபேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



இத்திருமணத்திற்கு விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா தலைமை வகிக்கிறார்.

சென்னை மாநகராட்சி கணக்கு நிலைக்குழுத் தலைவர் க.தனசேகரன், பகுதிச் செயலாளர்கள் மு.இராஜா - கே.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.டி.தங்கராசன், உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், வாசுகிப் பாண்டியன், பொன்.வா.லோகு, எஸ்.மைக்கேல், ஆர். சுரேஷ் பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் சி.பரிமேலழகன், சா.நாகராசன், ஆர். டி.நல்லேந்திரன், ஈ.கே. சாந்தகுமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

திருமணத்தில் - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்குகிறார்.

மேலும் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., காசி முத்துமாணிக்கம், வே.கௌதமன், வழக்கறிஞர் சிவஜெயராஜ், கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., ரத்னா லோகேஷ்வரன் எம்.சி., நிலவரசி துரைராஜ் எம்.சி.,

ஆர்.சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், சென்னை த.அரங்கநாதன், ஆர்.ராமமூர்த்தி, சுப.முத்துவேல், எஸ்.விஜயகுமார், பி.விஜயலட்சுமி, து.ரஞ்சித்குமார், மு.கோவிந்தராசன், வி.ஏ.ராஜா, பழக்கடை பாஸ்கர், தஞ்சை பாபு, மேட்டுக்குப்பம் எஸ். ரமேஷ்ராஜ், எஸ்.உமாபதி, அஜந்தா எஸ்.ரவி, பெ.தியாகு, அ.பாபு, பூக்கடை பழனிச்சாமி, ராஜ். செழியன், பி.கே.குமார், அ.கதிரேசன், கே.சதீஷ் கண்ணன், சோ.செந்தில் குமார், மு.அன்பழகன் உள்பட பலரும் திருமணத்தில் கலந்துகொண்டு வாழ்த்துகின்றனர்.

டி.சிவராஜ், என்.சேகர், எம்.பிரபு, எஸ்.சரவணா, எம்.விஜயன், ஆர்.செந்தில், டி.உதயகுமார், பி.சிவகுமார், என்.நந்தா உள்பட பலரும் திருமண விழாவில் கலந்துகொள்கிறார்கள்.

முன்னதாக - நாளை (1.2.2024-வியாழக்கிழமை) மாலை, திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### கழக துணை அமைப்புச் செயலாளர்

# ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. மாமியார் இறுதி ஊர்வலம்!

## வந்தவாசி - கல்யாணபுரத்தில் உடல் அடக்கம் - கழகத்தினர் அஞ்சலி!

திருவண்ணாமலை, ஜன. 31

கழக துணை அமைப்புச் செயலாளர் திரு.வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி மாமியாரும் தமிழ்நாடு அரசின் செய்தித் துறையில் உதவி இயக்குநராகப் பணிபுரியும் கமலாவின் தாயாரும், பெரணமல்லூர் ஒன்றிய கழகத்தில் இயக்க முன்னோடியாக திகழ்ந்த மறைந்த கல்யாணபுரம் எம்.சாமிநாதன் அவர்களின் மனைவியுமான திருமதி. சந்திராம்மாள் (வயது 89) அவர்கள், சிறிது காலமாக உடல் நலம் குன்றிய நிலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த போதும், சிகிச்சை பலனின்றி கடந்த 29.1.2024 அன்று மதியம் இயற்கை எய்தினார்.

அன்னாரது இறுதி ஊர்வலம் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி கல்யாணபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து நேற்று முன்தினம் (30.1.2024) மாலை புறப்பட்டு, இறுதிச் சடங்குகள் முடிந்து உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த சந்திராம்மாள் உடலுக்கு திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், மாநில மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர்.எ.வ.வே. கம்பன் வந்தவாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.. அம்பேத்குமார், செங்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, செய்யாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஒ. ஜோதி, முன்னால் சட்டமன்ற உறுப்பினர் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட துணைச்செயலாளர் ந.பாண்டுரங்கன், வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் க.லோகநாதன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் மா.ஏழுமலை, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் எச்.மதன்குமார்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் டி.வி.ஜி. இளங்கோ, மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் போளூர் மதியழகன், அரசு வழக்கறிஞர் திருவண்ணாமலை அருள், சென்னை தெற்கு மாவட்ட அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.தீபன், மாவட்ட பிரதிநிதி எ.ஏழுமலை, சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் தெற்கு பகுதி 76வது (அ) வட்ட செயலாளர் எஸ். வெங்கடேசன், 76வது வட்ட செயலாளர் எஸ். சசிகுமார், திரு.வி.க நகர் தெற்கு பகுதி தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைபாளர் எஸ்.கௌதம், பெரணமல்லூர் பேரூராட்சி தலைவர் வேணிஏழுமலை, தேசூர் பேரூராட்சி தலைவர் ராதா ஜெகவீரபாண்டியன், வந்தவாசி நகராட்சி துணைத் தலைவர் அன்னை க.சீனிவாசன், பெரணமல்லூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.டி.இராமசாமி, கிழக்கு ஒன்றிய அவைத்தலைவர் அமரேந்திரன், கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் சங்கர், பெரணமல்லூர் கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் யுவராஜ்,

வந்தவாசி மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.என். தினகரன், ஒன்றிய கவுன்சிலர் செல்வம், மடம் கிளைக்கழக செயலாளர் ராமநாதன், எட்டித்தாங்கல் கிளைக்கழக செயலாளர் ஏழுமலை, நரசிங்கபுர குப்பம் கிளைக்கழக செயலாளர் சர்க்கரை, கல்யாணபுரம் கிளைக்கழக செயலாளர்கள் விஜயகாந்த், ராஜி, கோட்டுப்பாக்கம் கிளைக்கழக செயலாளர் கே.பழனி, ஒன்றியபிரதிநிதி கோட்டுப்பாக்கம் ரமேஷ், தேசூர் நகர விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நகர செயலாளர் மு.பிரபாகரன், தேசூர் எழில்மாறன், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி 193 வட்ட செயலாளர் ஏ. கே.ஆனந்த், வந்தவாசி கலைஞர் தமிழ் சங்க தலைவர் வந்தை குமரன், வந்தவாசி ஸ்டாலின் (எ) பிரபு முட்டுக்காடு ராஜேஷ் சோழிங்கநல்லூர் ப.பிரகாஷ், கே.ஏ.சஞ்சய் 73 வட்ட செயலாளர் தமீம் பாய், சிறுபான்மை அணி நதீம் உள்ளிட்ட. இயக்கத்தின் முன்னோடிகளும், கழகத் தோழர்களும் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.





சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகரின் தாயார் திருமதி வி. எமிலி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அன்னாரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மேயர் ஆர்.பிரியா, எழும்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் சொ. வேலு, கே.எஸ்.எம். நாதன், நிர்மலா தேவி, புனிதவதி எத்திராசன் எம்.சி., எல்.சுந்தர்ராஜன் எம்.சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி. தாமோதரன், பகுதி நிர்வாகிகள், எஸ். ரசூல், டி.வி. வேலு, கே.அன்னபூரணி, எஸ். ஜெகதீசன், எம். தில்லை குமார், ஜெ.கே.கருணாகரன், வட்ட கழக செயலாளர்கள் வி.விஜயகுமார், ஆர். பாபு (எ) சந்திரசேகரன், எஸ்.டால்பின் ஹரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன், டி.தயாளன், எஸ். மனோகர், என். பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், எழும்பூர் தெற்கு மற்றும் வடக்கு பகுதி, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர், அனைத்து கழக உடன்பிறப்புகள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# மணிப்பூரில் மீண்டும் துப்பாக்கி சூடு!

இம்பால், ஜன.31-


மர்ம நபர்கள் துப்பாக்கி சூடு மற்றும் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர்.

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த ஆண்டு மே மாதம் இரு பிரிவினர் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கலவரம் வெடித்தது. இதில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து பல நாட்கள் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றதால், நாடு முழுக்க பரபரப்பு ஏற்பட்டது.

இதனிடையே, நேற்று மணிப்பூரில் தாக்குதல் சம்பவம் அரங்கேறியது. நேற்றைய தாக்குதலில் சிக்கி இரண்டு பேர் உயிரிழந்த நிலையில், ஐந்து பேர் காயமுற்றதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இம்பால் மேற்கு மாவட்டத்தில் உள்ள கௌட்ருக் என்ற கிராமத்தில் திடீர் துப்பக்கி சூடு நடத்தப்பட்டு இருக்கிறது.

துப்பாக்கி சூட்டில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. மேலும் கிராமத்தை சேர்ந்த ஒருவர் காணாமல் போனதாகவும் காவல் துறையினர் சார்பில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.





பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நேற்று (30.01.2024) ஏற்றுக் கொண்டனர்.